1993 ஏப்ரல் 12]

பி.டி. ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்கிறார்களே, ஏன் அதற்கு அந்த செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சியைக் குறைந்தபட்ச பயிற்சியாக வைத்து அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை ஏன் தரக்கூடாது என்கிற முறையிலே சில கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதைப்பற்றி நாம் பரிசீலிக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் போல' இன்று நர்சரிப் பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. நர்சரிப் பள்ளிகளிலே பயிற்சி இல்லாதவர்கள்- பி. எட். படித்தவர்கள், டிரெயினிங் படித்தவர்கள் எல்லாம் இல்லாமல்—அமர்த்தப்பட்டு இன்று கல்வித் தரம் குறைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார் நடத்துகின்ற மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும், நர்சரிப் பள்ளிகளிலும், பி. எட். படித்தவர்கள் அங்கே ஆசிரியர்களாகப் பணியாற்ற முடியும் என்ற ஒரு நடவடிக்கையை எடுத்தால், கல்வியினுடைய தரம் உயரும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் அங்கே எல். கே. ஜி., யு. கே. ஜி., 1-வது முதல் பெரும்பாலும் 5-வது வகுப்புவரை வைத்திருக்கிறார்கள். அதற்கு மேலே மற்ற உயர்நிலைப் பள்ளிகளுக்கு வந்து விடுகிறார்கள். 5-வது வகுப்புவரை சொல்லித் தருவதற்கு இடைநிலை ஆசிரியர் போதும் என்றுதான் இப்போது நாம் வைத்திருக்கின்றோம். அந்த முறையிலே பார்க்கின்ற போது அவர்களைப் போய் பி. எட். படித்தவர்களை வைத்துக் கொள்ளுங்கள் என்று நாம் சொல்ல முடியாது. ஆகவே, தகுதியுள்ள ஆசிரியர்களை வைத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் நாம் சொல்லமுடியும். அப்படிப்பட்ட உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 302. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்,

302—

குளத்தூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

* **11380—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :**

[1993 ஏப்ரல் 12

மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, குளத்தூரில் உள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்தத அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, தொகுதி குளத்தூரில் உயர்நிலைப் பள்ளி துவக்க 1992-9-3ம் கல்வி ஆண்டில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுத் தந்தை பெரியார் பிறந்த நாளான 17-9-1992 ஆம் நாளன்று பெரியாரின் அஞ்சாமை, வீரம் ஆகிய பண்புகளுக்கு இலக்கணமாகத் திகழும மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் என்னுடைய பரமக்குடி தொகுதியில் நயினார்கோவில் ஒன்றியம், குளத்தூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற வேளையில், அங்கே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளியில் அறிவியல் ஆசிரியர், தமிழ் ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாமலும், பள்ளிக்கூடம் வசதியில்லாமலும் இருப்பதனால், புதியதாக ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பள்ளிக்கு முன்னுரிமை கொடுத்து, அங்கே நிரப்பப்படவேண்டிய ஆசிரியர்களை நியமித்து, கட்டிட வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு டாகடர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை முறையாக பரிசீலிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இரண்டு ஊர்களில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டுமென்று நான் மனுக்கள் கொடுத் திருந்தேன். ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு மட்டும்

1993 ஏப்ரல் 12]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அடுத்து 60 ஆயிரம் பணம் கட்டி இருக்கின்ற அரியந்தளிலும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்து கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற உறுப்பினர்கள் எல்லாம் எங்களுக்கு ஒன்று கூட கிடைக்கவில்லையென்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 303, திருமதி கவிநிலவு தர்மராஜ் இருக்கையில் இல்லை.

வினா எண் 304. திரு. கி. தர்மலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

304—

வரதலம்பட்டு கிராமத்திலுள்ள சித்த வைத்திய மருத்துவ மனை

*10311—திரு. கி. தருமலிங்கம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டுத் தொகுதி, வரதலம்பட்டு கிராமத்தில் சித்த வைத்திய மருத்துவமனைக் கட்டிடம் கட்டி, மருத்துவப் பணிகள் துவங்கி சில மாதங்கள் மட்டுமே செயல்பட்டு பின்னர் மூடப்பட்டுள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அம்மருத்துவமனையை மீண்டும் திறந்து மருத்துவப் பணிகள் துவங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். 7-5-1984-ல் அணைக்கட்டுத் தொகுதி, வரதலம்பட்டு கிராமத்தில் அரசின் தலிக் கட்டிடத்தில் துவக்கப்பட்ட சித்த வைத்திய மருந்தகம், பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் பணிமாற்றம், மாற்றுப்பணி மருத்துவர் நியமனம் இல்லாமை மற்றும் பணியிலிருந்து மருத்துவர் மருத்துவ விடுப்பில் சென்றது போன்ற காரணங்களால் மருந்தகம் செயல்படுவதில் இடையிடையே தடைகள் ஏற்பட்டன. தற்போது மருந்தகம் தடையின்றி செயல்பட்டு வருகிறது.